# கரூர் துயரச் சம்பவம்: நடந்தது என்ன?

## அரசின் நடவடிக்கைகளை விளக்கி — வருவாய்த்துறைச் செயலர் திருமதி பி.அமுதா பேட்டி!



**சென்னை, அக்.2-**

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஊடகச் செயலாளர் திருமதி பி.அமுதா, சென்னை, தலைமைச் செயலகம், பிரதான கட்டடம், இரண்டாம் தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (30.09.2025) பத்திரிகையாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-**

செப்டம்பர் மாதம் 27-ஆம் தேதி கரூர் மாவட்டத்தில் ஒரு துயரமான சம்பவம் நிகழ்ந்துள்ளது. அந்த சம்பவம் நம்மை எல்லாருக்கும் மனவேதனை அளித்துள்ளது. அந்த சம்பவம் சம்பந்தமாக சமூக வலைதளங்களில் சில தவறான கருத்துக்கள் பகிரப்பட்டு வருகிறது. சில சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வருகிறது. அந்த சந்தேகங்களுக்கும், சமூக வலைதளங்களில் பரவி வரும் மற்ற விஷயங்களுக்கும் நிர்வாக ரீதியாக என்னவெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை தெரியப்படுத்துவதற்காக இந்த பத்திரிகையாளர் சந்திப்பு. முதலில் ஒரு காணொலிக் காட்சி மூலமாக என்னென்ன நடந்தது எல்லாம் முதலில் உங்களுக்கு காண்பிக்கிறோம். அதன் பிறகு என்னென்ன கேள்விகள் எல்லாம் சமூக வளைதளங்களில் வருகிறது. அதற்கு என்னென்ன பதில் இருக்கிறது என்பதை உள்துறைச் செயலாளர், சுகாதாரச் செயலாளர், DG மற்றும் ADG ஆகியோர் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் அந்த கேள்விக்கான விளக்கங்களை தர இருக்கிறோம்.

முதலில் வழங்கப்பட்ட இடம் - வேலுசாமிபுரம் இந்த இடத்தை காவல்துறை ஒதுக்கியிருந்தார்கள். அதாவது, அவர்கள் கடிதம் வழங்கியபோது, 7 இடங்கள் தாருங்கள் - 27ந்தேதி ஒரு கூட்டம் இருக்கிறது என்று வேண்டுதல் வழங்கி இருந்தார்கள். காவல்துறையும், அவர்களும் கலந்தாலோசனை செய்த பிறகு 25-ஆம் தேதி ஒரு இடம் வழங்கியிருந்தார்கள். 25-ஆம் தேதி இதே வேலுசாமிபுரத்தில் ஏற்கனவே ஒரு கூட்டம் நடத்தியிருந்ததால், அந்த இடத்தில் எந்தவித சிரமமின்றி, 10 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரம் பேர் அளவுக்கு கஷ்டப்படாமல் அந்த கூட்டம் நடைபெற்றது என்று அவர்கள் 26-ஆம் தேதி அந்த இடம் தாருங்கள் என்று கடிதம் அளித்திருந்தார்கள். அந்த கட்சி சார்பாக காவல்துறைக்கு 26-ஆம் தேதி அந்த இடம் கொடுங்கள் என்று சொல்லியிருந்தார்கள். அங்கு கரூர் லைட் ஹவுஸ் ரவுண்டானா பகுதியில் பாரத் பெட்ரோலியம் பங்க் உள்ள இடம் - அருகிலேயே வடிகால் கால்வாய் உள்ளதால் பாதுகாப்பு காரணம் கருதி அனுமதி வழங்கவில்லை.

அடுத்த இடம் உழவர் சந்தை வேண்டும் என்று அளித்திருந்தார்கள். இடம் 30-40 அகலத்திற்குள் இருக்கும் - 60 அடிக்கு அகலம் இருக்கும் இரண்டு பக்கம் போகக்கூடிய வாய்ப்பு உள்ளதால் இந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது.

**கேள்வி – பதில்**

**கேள்வி :** தமிழக உளவுத்துறையால் எத்தனை பேர் வருவார்கள் என முன்கூட்டியேகணிக்கமுடியவில்லையா?

**திருமதி அமுதா :** அவர்கள் கடிதத்தின் பத்தாயிரம் பேர் வரை கலந்து கொள்வார்கள் என்ற வேண்டுதல் வைத்திருந்தார்கள். ஏற்கனவே அந்தக் கட்சித் தலைவர் ஏற்கனவே நடத்திய திருச்சி, நாகப்பட்டின ஆகிய கூட்டத்தில் வந்திருந்த கூட்டத்தை வைத்து ஒரு 20 ஆயிரம் பேர் வரைக்கும் வருவார்கள் என்று கணித்திருந்தார்கள். 50 பேருக்கு 1 காவலர் என்ற நிலையான விகிதம் (standard ratio) இருக்கிறது. இந்த கூட்டத்திற்கு 20 பேருக்கு 1 காவலர் என்ற விகிதத்தில் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், அங்கு 3 - 4 மணிக்கு மேல் கூட்டம் அலைமோத ஆரம்பித்திருக்கிறது. 20000 பேர் 6 மணிக்கு மேல் இருக்கிறார்கள். கட்சித் தலைவர் வரும்போது வண்டியுடன் கூட்டம் வந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே இங்கே கூட்டம் இருக்கிறது. அதனால், 20000 பேருக்கு மேல் 25000 பேர் கூட்டத்தில் வந்திருந்திருக்கிறார்கள்.

**கேள்வி :** பரப்புரையின் போது மின்சாரம் நிறுத்தப்பட்டது என்ற செய்தி –

**திருமதி அமுதா :** ADGP செய்தியாளர்கள் கூட்டத்தில், இதற்கான விளக்கம் CEO. TANGEDCO அளித்திருந்தார்கள்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் பேசிக் கொண்டிருக்கும்போது மின்சார தடை ஏற்பட்டுள்ளது என்பது திட்டவட்டமாக மறுக்கப்படுகிறது.

இதனால், மின்சாரம் தடை செய்யப்படவில்லை என்று CEO அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

**கேள்வி :** காவலர்கள் தடியடி நடத்தியதால் தான் இது நடந்ததா?

**திருமதி அமுதா :** கூட்டம் ஏற்கனவே அதிகமாக இருந்திருக்கிறது - கட்சித் தலைவர் வரும்போது கூட்டம் சேர்ந்து அதிகமானதால் வண்டி நகர்ந்து செல்ல முடியாமல் போகிறது. அதனால், போலீஸ் சிறிது விலக்கிவிட்டிருக்கிறார்கள். ADGP – அந்த தலைவர் பேசிக் கொண்டிருக்கும் வண்டிக்கு முன்னால் pressure அதிகமாகி வந்தது – பின்னால் வந்த கூட்டம், முன்னால் வந்த கூட்டம் வந்தவுடன் DSP அழைத்து நிறுத்த சொல்லியிருந்தார். இதற்கு மேல் போகவேண்டாம் என்று சொல்லியிருந்தார். அதை அந்த organisers ஏற்றுக் கொள்ளவில்லை. அப்போது கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து செல்ல ஆரம்பித்தது என்று கூறினார்.

**கேள்வி :** பரப்புரை துவங்குவதற்கு முன்பே நெரிசல் சம்பவம் நடந்ததா?

**திருமதி அமுதா :** 12 மணிக்கு வரவேண்டும் - 3 மணிக்கு மேல் கூட்டம் அதிகமாகிக் கொண்டே வந்து கொண்டிருக்கிறது – அது போக மக்கள் காலையிலிருந்து காத்துக் கொண்டிருந்திருக்கின்றனர் - அவர்களுக்கு நீர்ச்சத்து குறைவு, தண்ணீர் கிடைக்கவில்லை - அதனால், நிறைய பேர் களைப்பு ஏற்பட்டு கீழே உட்கார ஆரம்பித்திருக்கின்றனர். அதுபோக, அவர் வைத்திருக்கின்ற ஒரு பெரிய வண்டியாக இருந்ததால், பக்கத்தில் உள்ள கூட்டம் இடம் பெயர்ந்து செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது - அப்போதுதான் மக்கள் கூட்ட நெரிசல் ஏற்பட்டிருக்கிறது.

**கேள்வி :** பரப்புரை கூட்டத்தின்போது எதற்காக ஆம்புலன்ஸ்கள் அடிக்கடி வந்தன?

**திருமதி அமுதா :** 7.14 நிமிடத்திற்கு முதல் அழைப்பு வந்தது. அங்கு 7.20 நிமிடத்திற்கு ஆம்புலன்ஸ் சென்றிருக்கிறது. 2-வது அழைப்பு 7.15 நிமிடத்திற்கு வந்தது. அங்கு 7.23 நிமிடத்திற்கு ஆம்புலன்ஸ் சென்றிருக்கிறது. 108-ல் உடனடியாக 6 ஆம்புலன்ஸ் பயன்படுத்தப்பட்டது.

**திருமதி அமுதா :** எந்த கூட்டத்திற்கும் அமைப்பாளர்களுக்கு (organisers) என்று ஒரு சில நிபந்தனைகள் இருக்கிறது. பெரிய கூட்டத்திற்கு 10,000-க்கு மேல் வருகிறார்கள் என்று சொன்னால் அமைப்பாளர்களே ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்திருந்தார்கள். 2 ஆம்புலன்ஸ் கட்சித் தலைவர் வண்டிக்கு பின்னாலேயே வந்து கொண்டிருந்தது. அதுமட்டுமல்லாமல், கட்சிக்காரர்களே 5 ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்திருந்தார்கள். மொத்தம் 7 ஆம்புலன்ஸ் கட்சிக்காரர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். சுகாதாரச் செயலாளர் கூறியபடி, 6 - 108 ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த சம்பவம் தெரிந்த பிறகு தான் கூடுதலாக ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த தகவல் எப்படி தெரிந்தது என்றால், காவலர்கள் ஃபோன் வேலை செய்யவில்லை என்றவுடன் வயர்லெஸ் மூலமாக தகவல் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அதன் பிறகு அரசாங்க வழியாக 108 ஆம்புலன்ஸ் வந்திருக்கிறது. மேலும், கட்சிக்காரர்கள் ஆம்புலன்ஸ் அருகில் இருந்தபடியால் முதலில் வந்திருக்கிறது. 9.45 மணிக்கு தனியார் ஆம்புலன்ஸ் வைத்து உடனடியாக மக்களை அரசு மருத்துமனைக்கு அழைத்து சென்றிருக்கிறார்கள்.

இவ்வாறு, வருவாய்த்துறைச் செயலாளர், தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

---

# குற்ற உணர்ச்சியால் ஓடி ஒளிந்தார் விஜய்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா பேட்டி!



**சென்னை, அக். 2-**

**"முதலமைச்சர் அரசியல் மனமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு, இங்கு நடந்த சம்பவத்தை மிக நாகரிகமாகவும், பண்புள்ள அரசியல் தலைவராகவும், முதிர்ச்சி அடைந்த அரசியல் தலைவராகவும் அணுகி இருக்கிறார்" என்றும் "ஏன் ஒளிந்து கொண்டிருக்கிறீர்கள்? ஏன் மக்களிடம் இதுவரை நீங்கள் செல்லவில்லை? அரசியலமைப்புக்கு எதிரான கருத்தைப் பதிவிட்ட, அதற்கு விமர்சனம் வந்த உடனே எடுத்து விட்ட ஆதவ் அர்ஜுனாவைக் கண்டிக்கின்றாரா? நம்மால்தான் இது நடந்தது என்கின்ற ஒப்புதல், அவர்கள் மனசாட்சியில் இருக்கிற காரணத்தினால், அவர்கள் ஓடி ஒளிந்து விட்டார்கள் என்பதுதான் உண்மை" என்றும் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., செய்தியாளர் சந்திப்பின்போது குறிப்பிட்டார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் - ஆ.இராசா எம்.பி. செய்தியாளர்களைச் சந்தித்தது குறித்த செய்தி அறிக்கை வருமாறு:-

விஜய் அவர்கள் கரூரில் கலந்து கொண்ட பிரச்சார நிகழ்ச்சியில் விலை மதிக்க முடியாத 41 உயிர்களை நாம் இழந்திருக்கிறோம். அரசியல் மனமாச்சரியங்களை தாண்டி இழந்தது மனித உயிர்கள் என்கின்ற அந்த அரிய உணர்வோடு, உன்னதமான உணர்வோடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக சென்று, அவர்களை எல்லாம் சந்தித்து நிவாரணம் அறிவித்து இரவே திரும்பி இருக்கிறார்கள்.

**தி.மு.க. வரலாற்றில் இப்படித்தான் தலைவர் இயங்குவார்!**

இது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நெடிய வரலாற்றில் இப்படித்தான் ஒரு தலைவர் இயங்குவார் என்பதற்கு அண்ணா காலத்திலிருந்தே முன்னுதாரணங்கள் உள்ளன. 2001ஆம் ஆண்டு கலைஞர் கைது செய்யப்பட்ட போது, அதை கண்டித்து, மிகப்பெரிய பேரணி ஒன்று நடந்தபோது, வன்முறையை தூண்டிவிட்டார்கள். அரசாங்கத்தினுடைய ஆதரவோடு அன்றைக்கு பலபேர் காயமடைந்தார்கள். சிலர் உயிரிழந்தார்கள். ஆனால் அந்தக் கோர சம்பவம் நடந்து கொண்டிருக்கிற போதே, கலைஞர் தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாமல், அதே இடத்துக்கு சென்றார்.

அதேபோல கொரோனா கோரத்தாண்டவம் ஆடியபோது, பிரதமர் உட்பட, தமிழ்நாட்டுடைய அமைச்சர்கள் உட்பட, இந்தியாவில் எந்த அமைச்சரும் எந்த சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல்வாதிகளும் வெளியே வர தாங்கிய காலத்தில், அப்போது "ஒன்றிணைவோம் வா! ஒன்றிணைவோம் வா!" என்றொரு முழக்கத்தை எழுப்பி, சட்டமன்ற உறுப்பினர்களை மாவட்ட கழக செயலாளர்களை அவரே வெளியே வந்து பொதுமக்களுக்கு எல்லா நிவாரணம் நிவாரணத்தையும் வழங்கிய இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம். அவர்தான் இன்றைக்கு இருக்கின்ற எங்களுடைய முதலமைச்சர்.

எனவே எப்போது வந்து ஒரு தேவை வருகிறதோ, ஒரு பரபரப்பான பதட்டம் வருகிறதோ, மக்களுக்கு தேவை வருகிறதோ, அப்போது எங்களுடைய உயிரையும் பணயம் வைத்து களத்திலே போய் நிற்பது தான் திராவிட முன்னேற்ற கழகத்தின் வரலாறு என்பதற்காகச் சில உதாரணங்களை சொன்னேன். அதை போலவே, இப்போது எங்களுடைய முதலமைச்சர் அவர்களும் செய்திருக்கிறார். இதிலே அரசியல் கிடையாது.

**தனிப்பட்ட முறையில் சில கேள்விகள்!**

ஆனால் எனக்கு தனிப்பட்ட முறையிலே சில கேள்விகள் இருக்கிறது. இப்படி களத்திலே நிற்க வேண்டிய தலைவர்கள், ஏன் கரூரில் களத்திலே நிற்கவில்லை?

செய்தி அறிந்ததற்கு பிறகும் அவசரவசரமாகச் செய்தியாளர்களை சந்திப்பதற்குகூட வெட்கப்பட்டு கொண்டு, பயந்து கொண்டு ஏன் சென்னைக்கு வந்தீர்கள்?

ஒன்றை என்னால் உணர முடிகிறது. அவர் ஒரு பிரபலமான நடிகர். அவர் இருந்தால் மீண்டும் கும்பல் கூடும். எனவே அவர் திருச்சியில் தங்கி கொண்டு இப்போது டிவிட்டர் போடுகிறார்களே, இப்போது உடன் இருக்கிறார்களே, அந்தத் தலைவர்கள் எல்லாம் ஏன் போய் களத்திலே நின்று, அவர்களுடைய காயத்திற்கு மருந்து போட்டு, இறப்புக்கு நிவாரணம் கொடுத்து, அவர்களுக்கு ஏன் ஆறுதல் சொல்லவில்லை?

அவர்களை அறியாமல் அவர்களிடத்தில் கில்ட்டி கான்ஷியஸ் குற்ற உணர்வு இருக்கிறது. நம்மால்தான் இது நடந்தது என்கின்ற ஒப்புதல், அவர்கள் மனசாட்சியில் இருக்கிற காரணத்தினால், அவர்கள் ஓடி வந்து விட்டார்கள் என்பதுதான் உண்மை.

**டிவிட் போட்டவரை கண்டித்தாரா?**

அதையெல்லாம் விட மிகப்பெரிய கொடுமை. அதிலே முக்கியமான இடத்திலே அந்த இயக்கத்திற்குப் பணம் கொடுக்கிற, ஒரு முக்கியமான இடத்தில இருக்கிற ஆதவ் அர்ஜுனா என்கின்ற நபர் ஒரு டிவிட் போடுகிறார். அந்த டிவிட்டில் நேபாளத்தில் நடந்தது போல, இங்கு ஒரு புரட்சி நடக்கும் என்கிறார். அகில இந்தியாவினுடைய வளர்ச்சியே வெறும் 8.5%, ஆனால் இங்கு 12% நெருங்கி விட்டது. இங்கு அமைதியாக இருக்கிற தமிழ்நாட்டில், வளர்ச்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிற தமிழ்நாட்டில் ஒரு புரட்சி வர வேண்டும் என்று இந்தியாவினுடைய இறையாண்மைக்கு, ஒருமைப்பாட்டுக்கு எதிராக சொல்கிறார்கள். அரசியலமைப்புக்கு எதிரான ஒரு கருத்தைப் பதிவிட்டு, அதற்கு விமர்சனம் வந்த உடனே எடுக்கிறார்.

நான் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். அந்தப் பதிவை எடுக்கிற அளவிற்கு தமிழ்நாட்டுடைய மக்கள் உணர்வோடு இருக்கிறார்கள். இந்த உணர்வு அவர்களுக்கு தெரிந்த பிறகுதான் எடுத்திருக்கிறார்கள். ஆனால் என்னுடைய கேள்வி, பதிவு போட்ட அவரோ அல்லது அவரை கண்டித்தோ அந்த கட்சியினுடைய தலைவர் இதுவரை அவரை கண்டித்திருக்கிறாரா அல்லது செய்தது தவறு என்று ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறாரா?

எனவே எந்தவிதமான அரசியல் புரிதலும் இல்லாமல்தான் சிறுபிள்ளைத்தனமாக இப்படி நடந்து கொள்வது, தமிழ்நாட்டு மக்களுக்கும் தமிழ்நாட்டு அரசியலுக்கும் நல்லதா என்பதை நான் தனிப்பட்ட முறையில் உங்களிடத்திலே கேட்க விரும்புகிறேன்.

**தனிப்பெரும் தலைவரின் நடவடிக்கை!**

முதலமைச்சர் அரசியல் மனமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு, இங்கு நடந்த சம்பவத்தை மிக நாகரிகமாகவும், பண்புள்ள அரசியல் தலைவராகவும், முதிர்ச்சி அடைந்த அரசியல் தலைவராகவும் அணுகி இருக்கிறார். அரசாங்கத்தின் சார்பில் அணுகியிருக்கிறார்; திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அணுகியிருக்கிறார். எங்களுடைய அமைச்சர்கள், எங்களுடைய மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்னமும் களத்தில் இருக்கிறார்கள். இதைவிட ஒரு இயக்கமோ அல்லது ஒரு தலைவனோ இப்படிப்பட்ட ஒரு நிகழ்விலே எதிர்கொள்ள இயலாத அளவுக்கு ஒரு தனிப்பெரும் தலைவராக இருக்கிறார்.

**குற்ற உணர்ச்சியை காட்டுகிறது!**

ஆனால் எனக்கு ஏற்பட்ட அந்த இரண்டு கேள்விகள்: ஏன் ஒளிந்து கொண்டிருக்கிறீர்கள்? ஏன் மக்களிடம் இதுவரை நீங்கள் செல்லவில்லை? நீங்கள் செல்ல வேண்டாம், நீங்கள் நடிகர். ஆனால் உங்கள் சார்பில் இருந்த தளகர்த்தர்கள், அந்த மாவட்டத்து தளகர்த்தர்கள், பக்கத்து மாவட்ட தளகர்த்தர்கள், மாநில பொறுப்பாளர்கள் இதுவரை ஏன் செல்ல தயங்குகிறீர்கள்? அது நீங்கள் உங்களுடைய குற்ற உணர்ச்சியைக் காட்டுகிறது என்றுதானே பொருள்.

இன்னொன்று இப்படிப்பட்ட பதிவுகளை எல்லாம் போடுகிற ஒருவரை கண்டிக்காமல், கட்சியை விட்டு நீக்காமல் இன்னமும் உங்களோடு வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, இது இந்திய அரசியலுக்கு தமிழ்நாட்டு அரசியலுக்கு நல்லதா என்பதை கேட்க விரும்புகிறேன்.

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. பேட்டியளித்தார்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் நார்த்தம்பட்டியைச் சேர்ந்த மணிகண்டன் என்ற மாற்றுத்திறனாளி இளைஞர் சமூகவலைதளத்தில் தனது கோரிக்கைகளை பதிவிட்டு இருந்தார். அதனை கவனித்த தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. அந்த இளைஞரின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது கோரிக்கைகளை கேட்டறிந்து விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார். இது குறித்து அரசு அதிகாரிகளையும் உடனடியாக தொடர்பு கொண்டு அந்த இளைஞரின் கோரிக்கைகளை விரைந்து செயல்படுத்துமாறு வலியுறுத்தினார். உடன் நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஏ.எஸ்.சண்முகம்,மாவட்ட துணை செயலாளர் ஆறுமுகம்,இளைஞர் அணி துணை அமைப்பாளர் கலைச்செல்வன்,ஐ.டி.விங் எம்.பி.கௌதம்,மற்றும் திமுகவினர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஏற்பாட்டில் அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் மொடக்குறிச்சி அன்பகம் கட்டுமானப் பணி துவக்கப்பட்டது. இதில் அந்தியூர் ப.செல்வராஜ், வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ., மேயர் நாகரத்தினம் சுப்பிரமணி, ஜோயல், இன்பா ரகு, அப்துல் மாலிக், இளையராஜா, சீனிவாசன், கஜேந்திர பிரபு, ஜி.பி. ராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.